TNNM080007742025

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

திருச்செங்கோடு

முன்னிலை:– திரு. P. ரங்கராஜ், B.A.B.L.,

நீதித்துறை நடுவர், திருச்செங்கோடு

சுருக்கு விசாரணை வழக்கு எண்.336/2025

2026– ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 27–ம் நாள் வியாழக்கிழமை

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் | அரசுக்காக,<br>சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,<br>திருச்செங்கோடு நகர காவல் நிலையம்,<br>குற்ற எண்.59/2025 |
| குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் முகவரி | நானிகவுண்டன் (வயது 56)<br>த/பெ. வெங்கடாசலம்,<br>4/121A, கீழ் தெரு, தாதாபுரம் அஞ்சல், வெள்ளாண்டிவலசு,<br>எடப்பாடி வட்டம்,<br>சேலம் மாவட்டம். |
| வனையப்பட்ட குற்றங்கள் | சட்டப் பிரிவுகள் 281, 125(b) BNS. |
| குற்றம் நிகழ்ந்த நாள் | 21.02.2025 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | 09.05.2025 (Bailed by police) |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 16.07.2025 |
| பிரிவு 274 BNSS – ன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | 12.09.2025 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | 15.06.2026 |

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.08.27 18:38:42 +0530

| | |
|---|---|
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | 17.08.2026 |
| பிரிவு 351(1)(ஆ) BNSS இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 20.08.2026 |
| தலைமறைவு எதிரி குறித்த விவரம் | Nil |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | Nil |
| முடிவு | இவ்வழக்கின் எதிரி, சட்டப் பிரிவுகள் 281, 125 (b) BNS – ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, பிரிவு 278(1) BNSS –ன் கீழ் எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கானது 18.07.2025-ம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் அ. உதயபானு, B.com.,B.L., நிலை 2 அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.K.அர்த்தனாரி மற்றும் திரு.M.சௌந்தரபாண்டியன் ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்டு ஆவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

01) கடந்த 21.02.2025–ம் தேதி காலை 7.45 மணிக்கு திருச்செங்கோடு நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திருச்செங்கோடு அண்ணாசிலை அருகே சாட்சி–1 இஸ்ரவேல் என்பவர் வேலூர் to திருச்செங்கோடு ரோட்டை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அண்ணாசிலை அருகே

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.27 18:38:48
+0530

சென்றுகொண்டிருக்கும்போது இறையமங்கலத்திலிருந்து திருச்செங்கோடு புதிய பஸ் நிலையம் செல்வதற்காக வந்த TN 30 N 0792 என்ற பதிவெண்கொண்ட அரசு டவுன் பஸ்சின் ஓட்டுநரான எதிரி எந்தவிதமான சிக்னலும் சைகையும் செய்யாமல் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் அண்ணாசிலை அருகில் ஒருவழிப்பாதையில் ஓட்டிவந்து சாட்சி–1–ன் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், மேற்படி விபத்தினால் சாட்சி–1 இஸ்ரவேல் என்பவருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும், மேற்படி குற்றத்திற்காக எதிரி மீது சட்டப் பிரிவுகள் 281, 125 (b) BNS – ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என திருச்செங்கோடு நகர காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02) மேற்கண்டவாறு தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையை பரிசீலனை செய்து வழக்கை கோப்பிற்கு எடுத்துக்கொண்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், இந்த வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களின் நகல்கள் யாவும் எதிரிக்கு பிரிவு 230 BNSS - ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

03) வழக்கு ஆவணங்களின் நகல்கள் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு படித்து பார்க்க போதுமான அவகாசம் வழங்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மீது சொல்லப்பட்டுள்ள குற்றங்கள் குறித்து வினவ போதுமான முகாந்திரங்கள் உள்ளன என்று இந்நீதிமன்றம் கருதியதால் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 281, 125 (b) BNS – ன் கீழ் குற்றம் பற்றி வினவிய போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என கூறினார். எனவே, இந்த வழக்கில் அரசு தரப்பை மெய்ப்பிக்க வேண்டி சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.08.27 18:38:54 +0530

<u>அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்</u>.–

04) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1/இஸ்ரவேல் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பரிசீலனை செய்தபோது, புகார் வாக்குமூலத்தில் தான் CHB காலனியில் உள்ள பாபிகுயின் ஹோட்டலில் வாட்சுமேனாக வேலை செய்துவருவதாகவும், தான் வழக்கம் போல் வேலைக்கு சென்று வேலையை முடித்து வீட்டிற்கு செல்லவேண்டி ஹோட்டலில் இருந்து புறப்பட்டு நடந்து புதிய பஸ் நிலையம் செல்வதற்காக கடந்த 21.02.2025–ம் தேதி காலை 7.45 மணியளவில் வேலூர் to திருச்செங்கோடு ரோட்டை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அண்ணாசிலை அருகே சென்றுகொண்டிருக்கும்போது இறையமங்கலத்திலிருந்து திருச்செங்கோடு புதிய பஸ் நிலையம் செல்வதற்காக வந்த அரசு டவுன் பஸ் TN 30 N 0792 – ன் ஓட்டுநர் எந்தவிதமான சைகையும் செய்யாமல் அதிகவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து அண்ணாசிலை அருகே வலதுபுறமாக ஒருவழிப்பாதையில் திருப்பி சென்றதில் ரோட்டின் ஓரமாக சென்றுகொண்டிருந்த தன் இடது காலின் கீழ் முட்டி மீதும், வலதுகால் வீரல்கள் மீதும் டயர் பட்டதால் இரண்டு இடங்களிலும் ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், அருகில் இருந்தவர்கள் தன் மகளின் கைபேசிக்கு தகவல் சொன்னார்கள் என்றும், உடன புறப்பட்டு வந்த தன் மகள் கலாராணி தன்னை திருச்செங்கோடு விசாகன் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தார் என்றும், அ.சா.1 திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனையில் சிசிச்சையிலிருந்தபோது திருச்செங்கோடு நகர காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.வருதராஜ் (அ.சா.5) அவர்கள் மருத்துவமனைக்கு சென்று அ.சா.1–யிடம் புகார்வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.59/2025, ச.பி.281, 125(a) ஆக முதல் தகவல் அறிக்கை/**அ.சா.ஆ.3** பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகாரை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.08.27 18:39:00 +0530

05) பின்னர் வழக்கு கோப்புகளை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 23.03.2025 –ம் தேதி 15.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவஇட சாட்சிகள் ஸ்ரீனிவாசன்/அ.சா.4, தாமரைக்கண்ணன்/பட்டியல் சாட்சி–6, ஆகியோர்களை விசாரித்து சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர்/**அ.சா.ஆ.2** மற்றும் மாதிரி வரைபடம்/**அ.சா.ஆ.4** தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் இஸ்ரவேல்/அ.சா.1, சேகர்/அ.சா.3, கிருஷ்ணன்/அ.சா.2 மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார்.

06) பின்னர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனமான TN 30 N 0792 என்ற பதிவெண்கொண்ட அரசுப்பேருந்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ஆய்விற்கு வேண்டி வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்து, பின்னர் மேற்படி பேருந்தை மோட்டார் வாகன ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.நித்யா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து மேற்படி அரசுப்பேருந்தின் ஆய்வறிக்கையை/**அ.சா.ஆ.5** பெற்று தாக்கல் செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட இஸ்ரவேல் என்பவருக்கு சிகிச்சையளித்த திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனை மருத்துவர் ரத்தீஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று/**அ.சா.ஆ.6** ஆகியவற்றை பெற்று தாக்கல் செய்துள்ளார். பின்னர் மருத்துவர் வழங்கிய காயச்சான்றிதழில் இஸ்ரவேல் என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கியுள்ளதால் சட்டப்பிரிவு 281, 125(a) BNS லிருந்து 281, 125(b) BNS ஆக சட்டப்பிரிவு மாறுதல்செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை/**அ.சா.ஆ.7** தயார்செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) BNS ன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

RANGARAJ P Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.27 18:39:04 +0530

07) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பிலும் சான்று பொருட்கள் ஏதும் குறியிடப்படவில்லை.

08) அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரியை பிரிவுகள் 351(1)(ஆ) BNSS–ன்படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் பதில் கூறியுள்ளார்.

09) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது, அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–</u>**

10) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரி மீது அரசுத் தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

11) எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளான பிரிவுகள் 281, 125(b) BNS - ன் கீழான குற்றத்தை நிரூபிக்க வேண்டுமென்றால், எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று விபத்து ஏற்படுத்தி, அந்த விபத்தின் மூலம் ஒருவருக்கு கொடுங்காயத்தை விளைவித்திருக்க வேண்டும். இவ்வழக்கு விபத்தின் காரணமாக அ.சா.1 இஸ்ரவேல்

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.08.27 18:39:11 +0530

என்பவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. இருப்பினும் அரசு தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்ட நபரான நனிகவுண்டன் என்பவர் விபத்து சமயத்தில் வாகனத்தை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று அ.சா.1 –ன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினாரா என்பதை பொறுத்து கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியங்களை வைத்து தான் முடிவு செய்ய இயலும்.

12) இவ்வழக்கின் புகார்தாரரும், காயம்பட்ட சாட்சியுமான அ.சா.1/இஸ்ரவேல் தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 21.02.2025–ம் தேதி காலை சுமார் 7.45 மணியளவில் தான் அண்ணாசிலையிலிருந்து திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையத்திலிருந்து புதிய பேருந்து நிலையம் செல்வதற்காக நடந்து சென்றுகொண்டிருந்தபோது, அப்போது தெற்கு பக்கத்திலிருந்து வந்த அரசுப்பேருந்து குறுக்காக திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையத்திற்கு வந்தபோது தன் மீது மோதிவிட்டதாகவும், அதில் தனக்கு கால் பாதத்தில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், பின்னர் அங்கிருந்தவர்கள் தனது மகளுக்கு போன் செய்து வரவழைத்தார்கள் என்றும், தனது மகள் வந்து தன்னை விசாகன் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார் என்றும், தான் விசாகன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் தன்னிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கிக்கொண்டார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13) அ.சா.1–ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில் இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியான அ.சா.1 மேற்படி எதிரி தான் சம்பவத்தன்று வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து தன் மீது மோதியதாக குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. எனவே அ.சா.1–ன் சாட்சியத்தைக்கொண்டு எதிரியின் அஜாக்கிரதை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாக முடிவுசெய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

RANGARAJ P Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.27 18:39:16
+0530

14) மேலும் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் இவ்வழக்கு விபத்தை நேரடியாக பார்த்ததாக சாட்சியமளிக்கவில்லை. அ.சா.2–ம், அ.சா.3–ம் தங்களது சாட்சியத்தில் எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தியதாகவோ, எதிரியை அடையாளப்படுத்தியோ எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே அ.சா.2, அ.சா.3–ன் சாட்சியம் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யும் வகையில் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

15) இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.4 தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், மேற்படி கையெழுத்தை சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு மதியம் 3.00 மணியளவில் அண்ணாசிலை அருகே நடந்த விபத்து சம்பந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதற்கு சாட்சியாக தான் கையெழுத்து செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.4 தனது குறுக்குவிசாரணையில், தான் சம்பவ இடத்தில் தான் கையெழுத்து செய்ததாக தெரிவித்துள்ளார். அ.சா.4 –ன் சாட்சியத்தின் மூலம் போலீசார் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார்செய்துள்ளது தெரியவருகிறது.

16) மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5/வருதராஜ் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் தனது சாட்சியத்தில், இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1/இஸ்ரவேல் என்பவர் திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது அ.சா.1–யிடம் புகார்வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு,

RANGARAJ P Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.27 18:39:22
+0530

சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும், பின்னர் எதிரியை கைதுசெய்து பிணையில் விடுவித்ததாகவும், மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றது பற்றியும், இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1–க்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்றது பற்றியும், பின்னர் அ.சா.1–க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால் சட்டப்பிரிவு மாறுதல் செய்தது பற்றியும், வழக்கு புலன் விசாரணையை முடித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.5–ன் சாட்சியம் அவர் மேற்கொண்ட புலன்விசாரணை குறித்து மட்டுமே உள்ளதே தவிர எதிரியை இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் தொடர்புபடுத்தும் வகையில் அமையவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

17) இவ்வழக்கு விபத்தை நேரடியாக பார்த்ததாக கண்ணுற்ற சாட்சிகள் சாட்சியமளிக்காத நிலையிலும், அ.சா.1–ம் எதிரியை அடையாளப்படுத்தி சாட்சியமளிக்காத நிலையிலும், உண்மையிலேயே அரசுதரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் வழக்கு சம்பவம் நடைபெற்றதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

18) எனவே அரசு தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்ட நபரான நனிகவுண்டன் என்பவர் விபத்து சமயத்தில் தான் ஓட்டிச்சென்ற வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று அ.சா.1 –ன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அ.சா.1க்கு கொடுங்காயம் ஏற்படுத்தியதாக போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.08.27 18:39:28 +0530

19) முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கின் எதிரி மீது பிரிவுகள் 281, 125 (b) BNS - ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, பிரிவு 278(1) BNSS –ன் கீழ் எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

20) எதிரி இவ்வழக்கில் எழுதிக்கொடுத்த பிணைமுறி பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27–ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரபட்டது.

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.08.27 18:39:33 +0530

நீதித்துறை நடுவர்,
திருச்செங்கோடு.

**அரசு தரப்பு சாட்சிகள்.–**

| Prosecution Witness No | Name of Witnesses | Description |
|---|---|---|
| அ.சா.1/LW1 | திரு.இஸ்ரவேல் | புகார்தாரர்/காயம்பட்ட சாட்சி |
| அ.சா.2/LW3 | திரு.கிருஷ்ணன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3/LW2 | திரு.சேகர் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4/LW5 | திரு.சீனிவாசன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5/LW9 | திரு.வருதராஜ் | புலன்விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்.–**

| Exhibit No | Description of the Exhibit | Proved by / Attested by |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார்வாக்குமூலம் | அ.சா.1 – 15.06.2026 |
| அ.சா.ஆ.2 | பார்வை மகசர். | அ.சா.4 – 20.07.2026 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.5 – 17.08.2026 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம். | அ.சா.5 – 17.08.2026 |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5 | TN 30 N 0792 என்ற அரசுப்பேருந்தின் மோட்டர் வாகன ஆய்வறிக்கை | அ.சா.5 – 17.08.2026 |
| அ.சா.ஆ.6 | அ.சா.1–ன் காயச்சான்றிதழ் | அ.சா.5 – 17.08.2026 |
| அ.சா.ஆ.7 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.5 – 17.08.2026 |

அரசு தரப்பு சான்று பொருள்.– இல்லை.

குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தரப்பு சாட்சி, சான்றாவணம்.– இல்லை.

RANGARAJ P Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.27 18:39:39 +0530

நீதித்துறை நடுவர்,
திருச்செங்கோடு.

<u>குறிப்பு.–</u>

1. எந்தவொரு சாட்சியும் மூன்று தினங்களுக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.
2. வழக்கு விசாரணையின்போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பிணையிலிருந்தார்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE**

CASE SUMMARY- STC.No.336/2025

<table>
<tr><th>S.No.</th><th>Description</th><th>Remarks</th></tr>
<tr><td>1.</td><td>Period of Remand of the Accused</td><td>Bailed by police (09.05.2025)</td></tr>
<tr><td>2.</td><td>The Date of Filing of the Complaint/Final Report of the Court</td><td>Complaint 23.02.2025<br>Final Report on 16.07.2025</td></tr>
<tr><td>3.</td><td>The Date of Committal of the Case to the Court of Session</td><td>Nil</td></tr>
<tr><td>4.</td><td>The Date of Questioning of the Accused under section 274 BNSS, as the case maybe</td><td>12.09.2025</td></tr>
<tr><td>5.</td><td>Filing of Miscellaneous Petitions an their results on challenge before superior Court. Except routine petitions like petitions Under Section 317 of the Code</td><td>Nil</td></tr>
<tr><td>6.</td><td>Date of examination in-chief and cross-examination of a Witness</td><td><table>
<tr><th>Witness</th><th>Chief</th><th>Cross</th></tr>
<tr><td>PW.1</td><td>15.06.2026</td><td>15.06.2026</td></tr>
<tr><td>PW.2</td><td>15.06.2026</td><td>15.06.2026</td></tr>
<tr><td>PW.3</td><td>17.06.2026</td><td>17.06.2026</td></tr>
<tr><td>PW.4</td><td>20.07.2026</td><td>20.07.2026</td></tr>
<tr><td>PW5</td><td>17.08.2026</td><td>17.08.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>7.</td><td>Date of examination of the Accused under section 351(1)(b) of the BNSS</td><td>20.08.2026</td></tr>
<tr><td>8.</td><td>Details of abscondence of an Accused and his appearance/production, as the case maybe</td><td>Nil</td></tr>
<tr><td>9.</td><td>Grant of stay by Superior Courts and the results thereof</td><td>Nil</td></tr>
</table>

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.27 18:39:44 +0530

Judicial Magistrate,
Tiruchengode.